# சவால்மிக்க உலகில் பல்சமய உறவும் உரையாடலும்: யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட J/84 - 87 வரையான கிராம அலுவலர் பிரிவுகளை மையப்படுத்திய பார்வை

**அ. சகாயசீலன்**
(கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி, அணி I, உயர் பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
a.kiruba80@gmail.com

உரையாடல் இல்லையேல் இன்று உலகமே இல்லை. உரையாடலின் வழியாக எத்தனையோ பிரச்சனைகளும் யுத்தங்களும் தவிர்க்கப்படுகின்றன. கிறிஸ்தவ சாட்சிய வாழ்விற்கு பிற சமயங்களுடனான உரையாடல் இன்றியமையாதது. ஆரம்பகாலத்தில் திருத்தந்தையர்களான ஜஸ்டின், ஜெரோம், அகஸ்டின் போன்றோர் பிறசமயங்களுடன் உரையாடல்களை மேற்கொண்டனர். ஆனாலும் முதலாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சிலுவைப் போரினாலும் அரசியல் மயமாக்கத்தினாலும் பிறசமய உரையாடல்கள் குறைவடைந்தன. நற்செய்திப் பணிக்கும் சமய உறவுப் பணிக்குமுள்ள தொடர்பு இன்றியமையாதது. 1962-1965 வரை நடைபெற்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வழியாக திருஅவைக்கு வெளியேயும் மீட்பு உண்டு என்னும் மாற்றுச் சிந்தனையால் திருஅவையின் கதவுகளும் யன்னல்களும் அகலத் திறந்து புதுப்பிக்கப்பட்டது. இந்த ஆய்வுப் பிரதேசமாகிய J/84-87 வரையான கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் பிறசமய உறவும் உரையாடலும் மேலோங்கிக் காணப்பட்டன. இதற்கு எஸ் ஜே. இம்மானுவேல் அவர்களால் 1986-1996களில் உருவாக்கப்பட்ட நற்சமூக நடுநிலையம் தக்க சான்றாகும். ஆனால் இந்த முயற்சி சமகாலத்தில் திருவினையாக்கவில்லை. இதற்கான காரணம் என்ன? என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வுக்கான பிரச்சினையாகும். இந்தக் காரணங்களை அறிந்து அவற்றை நற்செய்தியின் ஒளியில் புரியவைப்பது சமகாலத்தின் தேவைப்பாடாகும். பல்சமயச் சூழலில் வாழ்ந்துவரும் J/84-87 வரையான கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட கிறிஸ்தவ சமூகம் ஏனைய சமயங்களின் நல்ல கருத்துக்களை அறிந்து, மதிப்பளித்து, சமகால உலகின் சவால்களை எதிர்கொண்டு எதிர்காலத்தில் சமய பேதங்களற்ற சமத்துவம் பேணும் மக்கள் சமூகமாக வாழ வழிப்படுத்துவதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமும் இலக்குமாகும். கிறிஸ்தவ, இந்து, மற்றும் இஸ்லாமிய சமயத்தை விடய வரையறையாகக் கொண்டமைந்த இந்த ஆய்விலே தொகுத்தறிவு, வரலாற்று, அவதானிப்பு ஆகிய முறைகள் கையாளப்பட்டுள்ளது. சமயங்களின் உறவும் உரையாடலும் தொடர்பான இன்றைய நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தன்னுடைய சமய நம்பிக்கையில் உறுதியற்ற நிலையும், பிற சமயங்கள் பற்றிய போதிய தெளிவின்மையும், வன்முறையை வளர்க்கவும், தன்னை நியாயப்படுத்தவும், குறுகிய மனப்பாங்குடன் வாழ்வதும் சமூக அரசியலின் விழிப்புணர்வற்ற தன்மையும், தன்னைப் பற்றிய தற்பாதுகாப்பு முயற்சியுமே இன்றைய சமய உரையாடலுக்குத் தடையாக விளங்குகின்றன என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனை சீர்செய்ய சமயங்களிடையே சமரச உரையாடலை மேற்கொண்டு பிற சமயங்களில் காணப்படும் பக்திப் பாடல்கள், திருநூல்கள், அறக்கருத்துக்கள் என்பவற்றை அடியொற்றி தேசிய விழாக்கள், பொது நிகழ்வுகள், விளையாட்டுக்களை சமயங்கள்

கடந்த நிலையில் அனுசரித்து, பிற சமயங்கள் பற்றிய தவறான கருத்துக்களைக் களைந்து, தம் சமயத்தைத் பிறர்மேல் திணிப்பதைத் தவிர்ப்பது அவசியமாகும். சமயங்களின் உறவும் உரையாடலும் சமகால வாழ்வின் சவால்களை வெற்றிகொள வழிவகுக்கும் என்பதே இந்த ஆய்வின் பயனாகும்.

**திறவுச்சொற்கள்:**
பல்சம உறவு, பல்சமய உரையாடல், இரண்டாம் வத்திக்கான் சங்கம், நற்சமூக நடுநிலையம், சமரச உறவு.

## இலங்கை வடபுலத்தில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பணியில் தமிழ் ஊடகத்துறையின் பங்கு

**அருட்தந்தை அருளானந்தம் அன்ரன் ஸ்ரீபன்**
(இயக்குனர், மறைநதி கத்தோலிக்க ஊடக மையம், யாழ்ப்பாணம்)
aantonstephen@ymail.com

தொடர்பாடலும் தகவல் தொழில்நுட்பமும் என்றுமில்லாதவாறு இன்று மனித வாழ்வியலைவிட்டுப் பிரிக்க முடியாதளவிற்கு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக மாறி எல்லாத் தளங்களிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றன. அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட ஊடகத்துறை ஒரு சமூகத்தின் கூட்டான சிந்தனைப்போக்கை மாற்றி அச்சமூகத்தின் எதிர்கால செல்நெறியை தீர்மானிக்கும் வல்லமை படைத்ததாக மாறியுள்ள அதேவேளையில் மறைமுகமாக சமூகங்களுக்கிடையே சாதி மதரீதியான முரண்பாடுகளை தோற்றுவித்து அதனை வலுப்படுத்தி பிரிவினைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் அடித்தளமிடும் செயற்பாடுகளையும் சாணக்கியமாக ஆற்றிவருகின்றது. குறிப்பாக இலங்கை போன்ற பல்சமய மக்கள் வாழும் நாடுகளில் இதனுடைய தாக்கம் இலகுவில் உணரக்கூடியதாகவும் வெளிப்படக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இலங்கையின் வடபுலத்தில் முப்பது வருடத்திற்கு மேலாக நடைபெற்றுவந்த இனவிடுதலைப்போர் சர்வதேசத்தின் பலத்தோடு ஒடுக்கப்பட்டதன்பின் தமிழ் மக்கள் தலைமைத்துவ வெற்றிடத்திற்குள் நின்றுகொண்டு அதனை ஈடுசெய்யமுடியாமல் தமது இருப்பிற்காக தொடர்ந்தும் அகிம்சைவழியில் போராடிவருகின்றார்கள். இப்போராட்டத்தில் எதிர்கொள்ளும் சவால்களை மேற்கொண்டு தமது இருப்பையும் சுயநிர்ணய உரிமையையும் வென்றெடுக்க சாதி மத பிரிவினைகளை கடந்து மக்கள் ஒற்றுமையாக இருப்பதும் செயற்படுவதும் காலத்தின் தேவையென பலரும் சுட்டிக்காட்டிவருகின்றனர். எனவே இப்பின்னணியில் மக்களின் எதிர்கால வாழ்வை தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றான ஊடகங்கள் மக்கள் மத்தியில் மதநல்லிணக்கத்தை ஏற்படுத்தி தேசியம் எனும் பரந்தவெளிக்குள் மக்களை ஒன்றுபடுத்த முனையவேண்டும். இருப்பினும் மக்களின் ஒற்றுமையை மேலும் குலைக்கும் நோக்கில் தீய சக்திகளின் ஊடுருவல்களால் ஆங்காங்கே